கல்குடா கல்வி வலய வனநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (உ/த) – 2018 இறுதி

தரம்: 12 (2019)	தவணை: 03	புவியியல்.	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி – I இல் இருந்து எல்லா வினாக்களுக்கும்.
பகுதி – II இல் இருந்து முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கும்.
பகுதி – III இல் இரு வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி – I.


சரியான விடையின் இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக் கூட்டினுள் எழுதுக.

01. பின்வரும் விடைகளுள் எது 1:50000 இடவிளக்கப் படங்களில் காணப்படும் மூன்று பௌதீக அம்சங்களைத் தருகின்றது.
1. உயர் நிலங்கள், சாய்வுகள், இயற்கைத்தாவரம்.
2. காடுகள், வயல் நிலம், பயிர்கள்.
3. புல் நிலங்கள், பள்ளத்தாக்குகள், நெல் வயல்.
4. சமவெளி, குவிவுச் சாய்வு, குடியிருப்பு.
5. சதுப்பு நிலம், குவிவுச் சாய்வு, பாலங்கள். (.....)

02. 1::100000 எனும் அளவுத்திட்டத்தில் வடக்குத் தெற்கு நீளம் 10cm, கிழக்கு மேற்கு அகலம் 18cm கொண்ட செவ்வகம் ஒன்று வரையப்பட்டால் அதன் பரப்பளவு எத்தணை சதுர கிலோமீற்றர்களாக அமையும்.
1) 35 km^2. 2) 45 km^2. 3) 66 km^2. 4) 100 km^2. 5) 180km^2. (.....)

03. மிகச் சிறிய அளவுத்திட்டப் படமொன்றின் வகைக்குறிப்பின்னத்தினைச் சரியாகக் காட்டும் விடை எது?
1) 1:2000 2) 1:5000 3) 1:40000 4) 1:200000 5) 1:250000 (.....)

04. படத்தில் காட்டப்படும் பௌதீக அம்சம்.
1) சட்டத்தட்டு வடிகால். 2) மலைத் தொடர்.
3) கணவாய். 4) கூம்புக் குன்று. 5) தொடரலை நிலம். (.....)



05. பின்வரும் விடைகளுள் எது படை மண்டலத்தின் அண்ணளவான எல்லைகளைச் சரியாகத் தருகின்றது. .
1) 18 கி.மி - 40 கி.மி. 2)10 கி.மி - 60 கி.மி. 3) 14 கி.மி - 50 கி.மி.
4) 16 கி.மி - 80 கி.மி. 5) 10 கி.மி - 40 கி.மி (.....)

www.kedu.lk

06. வளிமண்டல பொதுச் சுற்றோட்டத்திற்குப் பொறுப்பான பிரதான காரணி யாது?
1)நிலத்திற்கும் கடலுக்கும் இடையில் அமுக்கச்சாய்வு விசையில் காணப்படும் வேறுபாடு.
2)அகலக் கோடுகளுக்கு மேலாகக் காணப்படும் தாழ் மற்றும் உயரமுக்க வலயங்கள்.
3)தாழ் அகலக்கோடுகளில் காணப்படும் உராய்வு விசை.
4)வெவ்வேறு அகலக் கோடுகளில் காணப்படும் கொரியோலிசு விசையின் மாறுதன்மை.
5)வெவேறு அகலக் கோடுகளில் இடம்பெறும் மைய நாட்டவிசை.

(…..)

07. புவியில் வீசுகின்ற காற்றுக்கள் வட அரைக்கோளத்தில் - வலஞ் சுழியாகவும், தென்னரைக் கோளத்தில் - இடஞ் சுழியாகவும் வீசுவதற்கான காரணம்.
1) அமுக்க வேறுபாடு. 2) பெரலின் விதி.
3) கொரியோலிசு விசை. 4) தாழமுக்க – உயரமுக்க வேறுபாடு. (…..)
5) புவியின் 23.5^0 சரிவு.

08. எல் - நினோ தோற்றப்பாடு நிகழ்வதற்கான காரணம்.
1) இந்து சமுத்திரத்தின் வெப்பநிலையில் சடுதியான வீழ்ச்சி.
2) பசுபிக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான வீழ்ச்சி.
3) அத்லாந்திக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான அதிகரிப்பு.
4) பசுபிக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் சடுதியான அதிகரிப்பு.
5) இந்து சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான அதிகரிப்பு. (…..)

09. பின்வருவனவற்றைப் பொருத்தும் போது நிரல் 01க்கு சரியாக அமையும் நிரல் - 02ன் விடை.

நிரல் - 01	நிரல் - 02
A. விரைவோட்ட ஆற்றுப் பகுதி.	1. கடல்தின்னல்
B. பீடைக் கிடைத்திணிவு.	2. நீர்த்தின்னல்.
C. புனற் பள்ளம்.	3. சுண்ணக்கல் பிருதேசம்.
D. கூழாங்கல் நாக்கு.	4. காற்றுத் தின்னல்.

1) 1,2,3,4. 2) 1,3.4,2. 3) 2,4,3,1 4) 2,3,1,4. 5) 2,1,4,3. (…..)

10. ஆற்றின் அரித்தல் செறிவினைப் பிரதானமாக நிர்ணயிப்பது .
1) சாய்வின் இயல்பு மற்றும் புவிச்சரிதவியல் அமைப்பு.
2) சாய்வின் இயல்பு மற்றும் மியாந்தர்கள்.
3) அரிப்பிற்குட்படும் பருப் பொருட்களின் தன்மை மற்றும் ஆற்று ஓங்கல்.
4) உயரணைகள் மற்றும் ஆற்று ஓங்கல்.
5) கழிமுகம் மற்றும் வெள்ளச் சமவெளி. (…..)

11. பின்வரும் எந்த மூன்று இடங்களில் இலங்கையின் உயர் நிலத்தொடருக்குரிய உருமாறிய பாறைகள் காணப்படுகின்றது.
1) இறக்குவானைக் குன்றுகள், மத்திய குன்றுகள் மற்றும் தப்போவை.
2) இறக்குவானைக் குன்றுகள், மத்திய குன்றுகள் மற்றும் கதிர்காமக் குன்றுகள்.
3) இறக்குவானைக் குன்றுகள், கதிர்காமக் குன்றுகள் மற்றும் அண்டிகம.
4) கதிர்காமக் குன்றுகள், தப்போவை மற்றும் அண்டிகம.
5) தப்போவ, அண்டிகம மற்றும் பள்ளம. (…..)

12. உலகின் முக்கியமான நான்கு சனத்தொகைச் செறிவுகளைக் காட்டும் சரியான விடை யாது?
1) கிழக்கு ஆசியா, தென் ஆபிரிக்கா, ஐரோப்பாவின் தென்பகுதி, வட அமேரிக்காவின் வட கிழக்குப் பகுதி.
2) கிழக்கு ஆசியா, தென் ஆசியா, வட மேற்கு ஐரோப்பா, தென் ஆபிரிக்கா.
3) தென் கிழக்கு ஆசியா, தென் ஆசியா, மத்திய அமேரிக்கா, வட அமேரிக்காவின் வட கிழக்குப் பகுதி
4) கிழக்கு ஆசியா, தென் ஆசியா, வட மேற்கு ஐரோப்பா, வட அமேரிக்காவின் வட கிழக்குப் பகுதி
5) கிழக்கு ஆசியா, தென் ஆபிரிக்கா,வட மேற்கு ஐரோப்பா, வட அமேரிக்காவின் மேற்குப் பகுதி, தென் ஆசியா. (…..)

www.ket.lk

13. பின்வரும் விடைகளுள் எது சனத்தொகையின் படி 2025ல் உலகில் காணப்படும் மிகப் பெரிய இரண்டு நகரங்களைக் சரியாகக் காட்டுகின்றது.
1) லண்டன் மற்றும் டோக்கியோ. 2) டோக்கியோ மற்றும் டாக்கா.
3) நியோக் மற்றும் மும்பாய். 4) டோக்கியோ மற்றும் மும்பாய்.
5) மும்பாய் மற்றும் கொல்கொத்தா. (…..)

14. பின்வரும் அம்சங்களில் எது 1:50000 இடவிளக்கப்படங்களில் அளவுத்திட்டமின்றி வரையப்படும்.
1) பெருந்தெரு. 2) புகையிரதப் பாதை. 3) ஆறு.
4) பொதுக்கட்டிடம். 5) குளம் (…..)

15. நிரல் - 01 காணப்படும் நாடுகளுடன் நிரல் - 02 காணப்படும் அவற்றின் தலைநகரங்களை பொருத்தும் போது சரியாக அமையும் விடை.

நிரல் - 01	நிரல் - 02
1. வங்களாதேஸ்.	A. பீஜிங்.
2. சீனா.	B. மொஸ்க்கோ.
3. அமேரிக்கா.	C. டாக்கா.
4. ரஷ்யா	D. வொசிங்டன்.

1)A,C,B,D. 2)A,B,C,D. 3)C,A,D,B. 4)A,C,D,B. 5)B,A,D,C. (…..)

16. படிவீழ்ச்சியினை எதிர்வுகூறுவதற்குப் பயன்படுத்தக் கூடிய வளிமண்டல ஈரப்பதனின் பொருத்தமான அளவீடு எது?
1) தனியீரப்பதன். 2) சாரீரப்பதன் 3) தண்ணீரப்பதன்.
4) நிரம்பாநிலை ஈரப்பதன். 5) மிகை குளிர்ச்சி ஈரப்பதன். (…..)

17. இலங்கையில் இரண்டாவது இடை மொன்சூன் காலம் என்பது.
1) ஒக்டோபர் - நவம்பர். 2) டிசம்பர் - ஏப்ரல்.
3) மே – செப்ரம்பர். 4) டிசம்பர் - பெப்ரவரி.
5) நவம்பர் - ஜனவரி. (…..)

18. சூழலியல் நியதி வாதம் என்பதன் படி.
1) பௌதிகச் சூழலுக்கு ஏற்ப மக்கள் தம்மை இசைவாக்கிக் கொள்ள முடியும்.
2) பௌதிகச் சூழல் மனித நடவடிக்கைகளில் வரையறைகளை ஏற்படுத்துகின்றது.
3) பௌதிகச் சூழல் என்பது மனித பயன்பாட்டுக்குரியது
4) மக்கள் தமது பௌதிகச் சூழலைத் தீர்மானித்துக் கொள்வர்.
5) பௌதிகச் சூழல் சமூக விருத்தியை ஏற்படுத்துகின்றது. (…..)

19. இலங்கையின் நிலப்பகுதியைப் பொறுத்த வரை முறையே பெரிதும் சிறிதுமான இரண்டு மாவட்டங்களைக் காட்டும் சரியான விடை.
1) அனுராதபுரம் மற்றும் கொழும்பு. 2) மொனறாகலை மற்றும் காலி.
3) பொலன்னறுவை மற்றும் கம்பகா. 4) அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பானம்.
5) அம்பாறை மற்றும் கொழும்பு. (…..)

20. <u>சுருங்கிய வயதுக் கூம்பகம்</u> ஒன்றின் மூன்று பிரதான அம்சங்களைக் குறித்துக் காட்டும் சரியான விடை யாது?.
1) குறைந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், உயர் பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்.
2) உயர் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்.
3) உயர் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், உயர் இறப்பு வீதம்.
4) குறைந்த வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதம்.
5) உயர் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம், உயர் பிறப்பு வீதம், உயர் இறப்பு வீதம். (…..)

(20 x 2 = 40 புள்ளிகள்)

www.ikeu.lk

பகுதி – II

01) தரப்பட்டுள்ள 1:50000 படத்ததைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

I. இப்படப் பிரதேசத்தின் அளியடைப்பை 1:100000 எனும் அளவுத்திட்டத்தில் வரைந்து காட்டுக? **(01 புள்ளி)**

II. இப் பிரதேசத்தில் இனங்காணக்கூடிய இரு வர்த்தகப் பயிர்களைக் குறிப்பிடுக? **(01 புள்ளி)**

III. A-B, P-Q கோடுகளால் காட்டப்பட்டுள்ள பௌதிக அம்சங்கள் எவை? **(02 புள்ளி)**

IV. இப் பிரதேசத்தின் வடிகால் பாங்கு பற்றி குறிப்பிட்டு அது அவ்வாறு அமைந்தமைக்கான காரணத்தைத் தருக? **(01 புள்ளி)**

V. இப்பிரதேசத்தின் பயிர்ச் செய்கைப் பரம்பலைத் தீர்மானிப்பதில் தரைத்தோற்றம் செல்வாக்குச் செலுத்தியுள்ள பாங்கினை விளக்குக? **(02 புள்ளி)**

VI. E – F – கோட்டினால் காட்டப்படும் நிர்வாக எல்லை எது? **(01 புள்ளி)**

VII. சதுரம் **G**ல் காணப்படும் சேவை நிலையங்கள் 04 தருக? **(02 புள்ளி)**

VIII. சதுரம் **D**ன் பரப்பளவைக் குறிப்பிடுக? **(01 புள்ளி)**

IX.. இப் பிரதேசத்தின் குடியிருப்புப் பாங்குகள், வீதி வலைப்பின்னல் பற்றி விளக்குக? **(03 புள்ளி)**

X. C இனால் குறிக்கப்பட்டுள்ள இடத்திற்குக் குறுக்காகச் செல்லும் நெடுங் கோட்டின் பெறுமானத்தினை சரியாகக் குறிப்பிடுக? **(01 புள்ளி)**

(15 புள்ளிகள்)

02).

I. புவியின் கற்கோளத்தில் காணப்படும் பிரதான புவியோட்டு விருத்திக்குறிய தகடுகள் 04 குறிப்பிட்டு அவற்றை உலகப் படத்தில் குறித்துக் காட்டுக? **(02 புள்ளி)**

II . கற்கோளத்தின் புவியோட்டு விருத்திக்குரிய தகடுகளின் அசைவினால் உருவாக்கப்படும் பிரதான நிலவுருவங்கள் 02ஐக் குறிப்பிட்டு 01ஐ விளக்குக? **(03 புள்ளி)**

III . புவி நடுக்கமொன்றினால் உருவாக்கப்படும் 03 பௌதிக ரீதியிலான தாக்கங்களைக் குறிப்பிட்டு 01 விளக்குக? **(04 புள்ளி)**

IV. புவி நடுக்கமொன்றினால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு எடுக்கக் கூடிய 03 நடவடிக்கைகளை விளக்குக? **(06 புள்ளி)**

(15 புள்ளிகள்)

03).

I. வரண்ட பிரதேசத்தில் காற்றுத் தின்னலைத் துரிதப்படுத்தும் காரணிகள் 04 தருக? **(02 புள்ளி)**

II. காற்றின் அரித்தல் செயற்பாட்டால் உருவாகும் நிலவுருவங்கள் 03ஐ புனையா வரைபடத்தின் உதவியுடன் விளக்குக? **(04 புள்ளி)**

III. இலங்கைக்கு மழை கிடைக்கும் வழிகளைக் குறிப்பிட்டு 01ஐ விளக்குக? **(04 புள்ளி)**

IV. வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டத்தின் - முதல் நிலைச் சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் "வியாபாரக் காற்றுக்களை" புனையா வரைபடத்தின் உதவியுடன் விளக்குக? **(05 புள்ளி)**

(15 புள்ளிகள்)

04)

I . காலநிலை மூலகங்கள் 04 தருக? **(02 புள்ளி)**

II. இலங்கையின் காலநிலை வலயங்களைக் குறிப்பிடுக? **(03 புள்ளி)**

III. மேலே கூறப்பட்ட காலநிலை வலயங்களுள் ஒன்றின் சிறப்பியல்புகள் 04ஐக் குறிப்பிடுக? **(04 புள்ளி)**

IV. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின்படி அயன மழைக் காலநிலையின் முனைப்பான 04 அம்சங்களினைச் சுருக்கமாக விளக்குக? **(06 புள்ளி)**

(15 புள்ளிகள்)

www.ikeu.lk

பகுதி – III.

01)

I. இடப்பெயர்வு என்பதை வரைவிலக்கனப் படுத்துக? **(02 புள்ளி)**

II. சனத்தொகையின் சமனற்ற பரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள் 06ஐக் குறிப்பிட்டு, 02ஐ விளக்குக? **(04 புள்ளி)**

III. இலங்கையின் சனத்தொகை கட்டமைப்பில் தற்காலத்தில் இடம்பெற்று வரும் மாற்றங்கள் ஒன்றைக் குறிப்பிட்டு அவற்றை ஆராய்க? **(04 புள்ளி)**

IV. இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தொழிளாலர் வெளி இடப்பெயர்வின் மூலம் உருவாக்கப்படும் 03 பங்களிப்பினை மதிப்பீடு செய்க? **(05 புள்ளி)**

(15 புள்ளிகள்)

02)

I. குடியிருப்பு என்பதை வரைவிலக்கனப்படுத்துக? **(02 புள்ளி)**

II .இலங்கையின் காணப்படும் பிரதான குடியிருப்பு வகைகள் 04ஐக் குறிப்பிடுக? **(02 புள்ளி)**

III. வளர்முக நாடுகளில் காணப்படும் விரைவான நகராக்கத்திற்குப் பொறுப்பான நான்கு காரணிகளை விளக்குக? **(06 புள்ளி)**

IV. இலங்கையின் மெதுவான நகர வளர்ச்சிக்கு அடிப்படையான 03 காரணிகளை விளக்குக? **(05 புள்ளி)**

(15 புள்ளிகள்

03)

I. இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களை குறித்துக் காட்டுக?

1.கண்டி. 2.கொழும்பு. 3.தம்புள்ளை.

4.திருகோணமலை. 5. மாத்தரை. 6.பதுளை. **(03 புள்ளி)**

II. குடியகல்வால் ஏற்படும் சாதக, பாதக விளைவுகள் தலா 02 தருக? **(04 புள்ளி)**

III. வளர்முக நாடுகளில் காணப்படும் நகராக்கப் பிரச்சிணைகள் நான்கைக் குறிப்பிட்டு 02 விளக்குக? **(04 புள்ளி)**

IV. விவசாய நடவடிக்கைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் நன்மைகள் 04ஐ உதாரணங்களுடன் விளக்குக? **(04 புள்ளி)**

(15 புள்ளிகள்)

குறிப்பு- உலகப் படம், இலங்கைப் படம் வழங்கவும்.

www.lkedu.lk